மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 320, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

320—

இழப்பீட்டுத் தொகை

***7349—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு விடையளிக்கும் முன்பு, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையிலே பல்வேறு வகைப்பட்ட அறிவிப்புகளை அறிவித்து, வரலாற்று சாதனை படைத்து, நாட்டிலேயே தமிழகம் கல்வியில் முன்னேறிய மாநிலமாக இருக்கவேண்டுமென்று, உயர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறுபட்ட அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். தமிழகத்தின் உயர் கல்வித் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் 13 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அதிலே, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் இதுவரையில் இடமோ அல்லது நிருவாகக் கட்டடமோ இல்லாமல் இருந்தது. அந்த வகையில், அந்தக் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்குப் புதியதாக 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 4]

முற்பகல் 10-35

மேலும், அனைவரும் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு, மயிலாடுதுறையில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கும் அனுமதியளித்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, அண்ணா பல்கலைக்கழகத்திலே சேர்ந்து படித்துக்கொண்டிருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்குத் தங்கும் விடுதிகள் கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு, 30 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே புதிய கல்லூரிகளைத் தொடங்கியிருப்பதன் காரணமாகவும், ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்றதன் காரணமாகவும், ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதன் காரணமாகவும், ஏற்கெனவே புதிதாகத் தொடங்கப்பட்ட பாடப் பிரிவுகள் காரணமாகவும், கல்லூரிகளிலே ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதன் காரணமாகவும், தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 1,112 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தஞ்சாவூர் மற்றும் தருமபுரியிலே புதிதாக கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் தொடங்குவதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் ஏற்கெனவே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. நிருவாக வசதிக்காக, 4 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, கல்லூரி முதல்வர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாணவர்களுடைய நலன் கருதி, அனைவரும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, 797 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தவகையில், இந்த ஆண்டு 163 பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்திய, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்குக்

கோடானு கோடி நன்றியை அவர்தம் மலர்ப் பாதங்களில் முதலில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியின் பதிலுக்கு வருகிறேன். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 42 கோடியே 41 இலட்சத்து 52 ஆயிரத்து 525 ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வம், நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதம், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவுக் கொடுத்து காப்பதுபோல், கழகத்திலுள்ள 1½ கோடி தொண்டர்களுக்கு வாழ்வளித்து, தொண்டர்களை கண்ணை இமை காப்பதுபோல் காத்துவரக்கூடிய, கழகத்தின் பொதுச் செயலாளர், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகளே இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனைக் கட்சிகளையும் தூக்கியெறிந்து, இனி கட்சி என்று சொன்னால், அது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. மட்டும்தான்; அரசியல் கட்சித் தலைவர் என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மக்களாலே அளிக்கப்பட்ட தேர்தல் வெற்றியின்மூலம் நிரூபித்துக்காட்டி இருக்கக்கூடிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகம் என்னுடைய தொகுதியில்தான் இருக்கிறது. அந்தத் தொகுதி மக்கள்தான்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுத்தார்கள். அதிலே, வடவள்ளி, பாப்பநாயக்கன்புதூர், அஜ்ஜனூர், ஓணாபாளையம், நவாவூர் பிரிவு போன்ற பகுதிகளைச் சார்ந்த நிலம் கொடுத்த விவசாயிகள் இழப்பீட்டுத் தொகை கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை வேண்டுமென்று கேட்டுவழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்கிலே, நீதிமன்றம், முதலில் ஒரு ஏக்கருக்கு ரூ.50,000/- இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று திர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நல்ல பதிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைபோல, 4-5-1982-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தை உருவாக்கித் தந்தார்கள். அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிலம் கோவை மாவட்டம், சோமயம்பாளையம் மற்றும் வடவள்ளி ஆகிய கிராமங்களிலுள்ள புல எண்கள் 31/86, 32/83 மற்றும் 105/86-ல் உள்ள 994.04 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிலங்களின் அப்போதைய மொத்த மதிப்பு சுமார் 92,71,201 ரூபாய். நில உடைமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டது. மேலும் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்த உடைமையாளர்களில், இதுவரையில் 110 நில உடைமையாளர்களுக்கு பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளன. அதோடு மட்டுமல்லாமல், இவற்றில் சிலர் இழப்பீட்டுத் தொகை போதவில்லையென்று சொல்லி, அதனை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 19 குழுக்களாக கோவை கூடுதல் அமர்வு நீதிமன்றம்-1-ல் வழக்குத் தொடர்ந்தனர். கோவை கூடுதல் அமர்வு நீதிமன்றம் 29-10-2007 அன்று வழங்கிய ஆணையின்படி கூடுதல் இழப்பீட்டுத் தொகையாக ரூ.120 கோடியினை நிலம் கொடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பினை வழங்கியது. பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் கோவை தெற்கு

வட்டாட்சியர் ஆகியோர்மீது மேலும் 19 நில ஆக்கிரமிப்பு வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டன. இவ்வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படையில், கூடுதல் இழப்பீட்டுத் தொகையினை வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவினை வழங்கியது.

முற்பகல் 10-40

பாரதியார் பல்கலைக்கழகம் நீதிமன்ற உத்தரவைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசிடம் முறையீடு செய்தது. இந்தக் கோரிக்கையை கவனமுடன் பரிசீலித்து, நில நிருவாக ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில், ரூ.42,41,52,525/-ஐ பாரதியார் பல்கலைக்கழகத்தின்மூலமாக வழங்க வேண்டுமென்று 2-4-2013 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில், தொகையினை கோவை மாவட்ட வருவாய்த் துறையின்மூலமாக கோவை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக ரூ.38,17,37,274/- செலுத்தப்பட்டு, நிலம் வழங்கியவர்களுக்கு மேற்படி தொகையில் இழப்பீடாக ரூ.31,47,75,998/- வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள ரூ.6,69,61,276/-க்கும் 20 வாரிசுதாரர்கள் உண்மைத் தன்மை குறித்து அடையாளம் காண இயலாததால், இழப்பீட்டுத் தொகை வழங்காமல், மேற்படித் தொகை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அவர்களது உண்மைத் தன்மை அறிந்த பின்பு, மீதியிருக்கக்கூடிய 20 வாரிசுதாரர்களுக்கும் அத்தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டிருந்தேன். ஏனென்றால், மாணவர்கள் கல்வி பயில அங்கிருந்து 10 கி.மீ. கடந்து, கோயம்புத்தூருக்குத்தான் வர வேண்டும். அங்கே மருதமலை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில்தான் பள்ளிக்கூடமும் இருக்கிறது. ஆகவே, அங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துக் கொடுத்தால்

2014 ஆகஸ்ட் 4]

அந்தப் பகுதி மக்களுக்கு மிகச் சிறப்பானதாக இருக்கும். கேட்டவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே கல்லூரி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்களது தொகுதியில் புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் 707 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் குறிப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டிலிருக்கக்கூடிய 32 மாவட்டங்களில் கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் அதிக அளவில் 54 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. 1 அரசுக் கல்லூரியும், 7 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகள் 15-ம், ஓர் உறுப்புக் கல்லூரியும் இங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதிக்கு ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாநகராட்சிப் பகுதியாக இருந்தால், இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் இரண்டு ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுக்கின்ற பட்சத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.208 கோடியை வழங்க வேண்டுமென்று தீர்ப்பளித்து, அதில் முதல் தவணையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 42 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை*

வழங்கப்பட்டுள்ளது. மீதி இழப்பீட்டுத் தொகையான 166 கோடி ரூபாய் வழங்க வேண்டியிருக்கிறது. நிருவாகமும், அரசும் வழக்கிற்குச் செல்வதாகத் தகவல்கள் உள்ளன. 35 வருட காலமாக நிலுவையிலிருக்கக்கூடிய பிரச்சினை இந்தப் பிரச்சினை. ஆகவே, இதில் அரசு தலையிட்டு, உடனடியாக அவர்களுக்கு மீதித் தொகையை வழங்க வேண்டுமாய் உங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுடைய உரிமையாளர்களுக்கு மீதித் தொகையை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 34 வருடங்களாக முடிக்க முடியாத பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 42 கோடி ரூபாய் நிதியினை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட காலமாக நிலுவைத் தொகை வழங்கப்படாமல் இருந்த இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்று, நிலம் கொடுத்த அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு, நிலுவைத் தொகை வழங்கப்படாமல் இருந்ததை அறிந்து, அந்த விவசாயிகள்மீது அக்கறை கொண்டு, நீதிமன்றம் என்ன சொன்னதோ, என்ன உத்தரவு வழங்கியதோ, அதைக் கண்ணும் கருத்துமாகச் செயல்படுத்தியிருக்கிறார்கள். அப்படி நிவாரண நிதி வழங்கப்படும்போது, நில உடைமைதாரர்கள் யார் என்பது தொடர்பான விவரங்கள் அரசினுடைய கவனத்திற்கு வராமல் இருக்கின்றது. அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி முழுமை பெற்று, அவர்கள் யாரென்று அடையாளம் காணப்பட்டு, உரிய விவசாயிகளுக்கு அந்த மீதித் தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

2014 ஆகஸ்ட் 4]

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 2012-2013 ஆம் கல்வியாண்டிலே கல்வியிலே பின்தங்கிய தொகுதியான வேடசந்தூரிலே, புதிய கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, இன்றைக்கு சற்றேறக்குறைய 750 மாணவர்கள் உயர் கல்வி பெறும் வகையில் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. இந்தக் கல்லூரிக்கு இசித்தூர் கிராமத்திலே 7 ஏக்கர் 28 சென்ட் நிலம் தானமாகப் பெறப்பட்டு, பல்கலைக்கழகத்தினுடைய பெயருக்கு நில உடைமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அந்த இடத்தில் கல்லூரிக்கான கட்டடத்தைக் கட்டி, உடனடியாக அங்கே கல்லூரி இயங்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு, மாணவர்கள் அனைவரும் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், இதுவரையில் 52 புதிய கல்லூரிகளைத் தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து இன்றைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக 24 கல்லூரிகளும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக 13 கல்லூரிகளும், அரசுப் பொறியியல் கல்லூரிகளாக 4 கல்லூரிகளும், அரசுப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளாக 11 கல்லூரிகளும், இதுவரையில், இந்த மூன்று ஆண்டுகளில், ஆக மொத்தம் 52 கல்லூரிகளை தமிழகத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.*

அந்தக் கல்லூரிகளுக்கு நிரந்தரமான இடம் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கே கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உரிய நிதியினை வழங்கி, இதுவரையில் 2 கல்லூரிகளுக்கான கட்டடப் பணிகள்

முடிவடைந்து, அந்தக் கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்ந்து, தற்போது படித்து வருகிறார்கள். கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்காக, மீதமுள்ள 30 கல்லூரிகளுக்குத் தற்போது நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் பொறியியல் கல்லூரிகள் 4; பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 11. இந்தப் பொறியியல் கல்லூரிகளுக்கும், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் சேர்த்து இப்போது கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல், நிலம் தேர்வு செய்து, கட்டடப் பணிகளை மேற்கொள்ள 7 கல்லூரிகள் தயார் நிலையில் உள்ளன. அந்தக் கல்லூரிகளில் ஒன்றைத்தான், மாண்புமிகு உறுப்பினர் தனது வேடசந்தூர் பகுதியிலே உள்ள நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அந்தக் கல்லூரிக்கு இந்த ஆண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தக் கல்லூரிக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 321, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

321—

கூட்டுறவுச் சங்கம்

***4386—திரு. மு.வீ. கருப்பையா:**

திரு. எல். வெங்கடேசன்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?